1978ம மார்ச் 8]

புலவர்களுக்கு நிதி உதவி.

*வினா—450— திரு. தாழை மு. கருணாநிதி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா.

ஏழைப் புலவர்களுக்கு மாதந்தோறும் ரூபாய் 75 உதவித் தொகை வழங்கும் திட்டம் எப்பொழுதிலிருந்து, எந்த அடிப்படை யில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஏழைத் தமிழறிஞர் களுக்கு மாதந்தோறும் ரூபாய் 100 (ரூபாய் 75 அல்ல) உதவித் தொகை வழங்கும் திட்டம் 15—1—1978 (திருவள்ளுவர் நாள்) முதற் கொண்டு நடைமுறைக்கு வந்துள்ளது.

(2) மாதம் ரூபாய் 150-க்கும் குறைவாய் வருமானமுள்ள, தமிழ் மொழிக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் பலரும் அறிந்த வகையில் தொண்டு செய்ததாகக் கருதப்படும் ஏழைத் தமிழறி ஞர்களே இந்நிதியுதவிக்குத் தகுதியானவர்களாவர். இத்தகைய வரிடமிருந்து விண்ணப்பங்கள் செய்தித் தாளில் விளம்பரம் செய்து தமிழ் வளர்ச்சி இயக்குநர் பெறுவார். விண்ணப்பதாரரின் நிதி நிலைமை பற்றிய அறிக்கை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சி யரிடமிருந்து பெறப்படும். மற்ற தகுதிகள் குறித்து அரசால் நியமனம் செய்யப்பட்டுள்ள வல்லுநர் குழுவினர் (Experts Committee) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு தகுதி யான விண்ணப்பதாரரின் பெயர்கள் உயர் அதிகாரக் குழு (High Power Committ e) வுக்கு பரிந்துரை செய்யப் படும். உயர் அதிகாரிக் குழு தகுதி பெற்றவர்கள் குறித்து இறுதியாக முடிவெடுக்கும். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் ஏழைத் தமிழறிஞர்கள் உதவித் தொகை பெற்று பயனடைவர்.

திரு. தாழை மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் எத்தனை விண்ணப்பங்கள் இதுவரையில் வந்திருக்கின் றன. அதிலே ஒவ்வொரு மாவட்டத்திலும் எத்தனை விண்ணப் பங்கள் வந்திருக்கின்றன என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இது பற்றிக் தனிக் கேள்வி போட்டால் அந்த முடிவு தேதிக்குள் வந்த விண்ணப்பங்களைப்பற்றி தகவல் சேகரித்துத் தருவதற்கு வசதியாக இருக்கும்

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : பேரவைத் தலைவரவர்களே, ஏழைப் புலவர்களுக்கு மாதந்தோறும் உதவித் தொகை வழங்கு வதைப் போல ஏழைப் பட்டதாரிகள், முதுநிலைப் பட்டதாரிகள் ஆகியவர்களுக்கு நிதியுதவி வழங்க இந்த அரசு ஏற்பாடு செய் யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே அப்படியொரு யோசனை இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, நெருக்கடி நிலைப் பிரகடனத்திற்கு முன்பு தமிழ்நாட்டில் மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது அது இடைக்காலத்தில் நெருக்கடி நிலை ஏற்பட்டு நிறுத்தப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து வழங்க இன்றைய நமது அரசு முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-40.]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, தமிழ் மொழிக்கு ஆதரவாக நடத்திய போராட்டங்களில் பங்கு கொண்ட நண்பர்களுக்கு உதவித் தொகை அளிப்பது குறித்து முதலமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

உடல் ஊனமுற்றோருக்கான வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ளவர்கள்.

*வினா 451 திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையிலுள்ள உடல் ஊனமுற்றோருக்கான வேலை வாய்ப்பகங்களில் இது வரை பதிவு செய்து கொண்டுள்ளவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்களுள் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) இதுவரை 9,701 உடல் ஊனமுற்றவர்கள் சென்னையிலுள்ள உடல் ஊனமுற்றோர் சிறப்பு வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்துகொண்டுள்ளனர்.

(ஆ) 2,650 உடல் ஊனமுற்றோர்களை சென்னையிலுள்ள உடல் ஊனமுற்றோர் சிறப்பு வேலை வாய்ப்பகம் 31-10-77 வரை வேலையில் அமர்த்தியுள்ளது.